# கழுகின் சத்தம்

## நவம்பர் 28, 2023




சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்திகளிலிருந்து

# மறைவான வல்லமை



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: ஓர் கலியாண விருந்து, அக்டோபர் 4, 1956

34. அங்கே தான் அவர்கள் இருந்தனர். இந்த வஸ்திரம் வரும்போது... இங்கே சில கம்பெனிகள் இங்கே செய்யும் ஏதோ வொரு பெரிய வஸ்திரத்தை நான் பொருள்கொள்ளவில்லை. அது மனித னுடைய வெளிப்புறத்தைப் பார்க்கும்படி யாக அவனுக்காக உண்டாக்கப்பட்டிருக் கிறது. ஆனால் கிறிஸ்து உங்களுக்கு கொடுக்கும் வஸ்திரமானது... நீங்கள், ‘அது ஒரு வஸ்திரமா?’ என்று கேட்கலாம். ஆம்.

‘என்னுடைய குமாரர்களில் ஒருவன் உமது ஒரு பாரிசத்திலும் மற்றவன்... உட்கார்ந்திருக்கும்படி அருள் செய்ய வேண்டும்’ என்று கூறிய ஸ்திரீயிடம் இயேசு சொன்னார்.

அவர் பிரதியத்திரமாக, ‘நான் குடிக்கும் பாத்திரத்தில் நீங்கள் குடிக்கவும், நான் பெறும் ஸ்நானத்தை நீங்கள் பெறவும் (அல்லது அந்த வஸ்திரத்தைத் தரிக்கவும்) உங்களால் கூடுமா’ என்றார். அவர், ‘நீங்கள் பெறுவீர்கள்’ என்றார். ஆமென்.

விருந்திற்காக அழைக்கப்பட்ட அந்த விசுவாசிக்குள்ளே கிறிஸ்துவுக்குள்ளே இருந்த அதே பரிசுத்த ஆவியானவர் வருகிறார். அவன் குமாரனாக எண்ணப் படுகிறான், ஏனெனில் அவன் தகப்பனின் ஒரு பாகமாக (ஆமென்.), ஒரு பிள்ளை யாக ஆகிறான்.

நான் பித்து பிடித்தவன் என்று நீங்கள் எண்ணுகிறீர்கள் என்பதை நான் அறிவேன். ஆனால் நான் அப்படி இருப்பேனானால், என்னைத் தனியே விட்டு விடுங்கள்; நான் இவ்விதமாக இருப்பதில் சந்தோஷப்படு

கிறேன். நான் என்னுடைய சரியான சிந்தையில் இருக்கும்போது, நான் மற்ற விதமாக இருப்பதைக் காட்டிலும், இவ்வித மாக இருப்பதையே சிறந்ததாக உணர் கிறேன். ஓ, அது அற்புதமானது, அது சொல்லி முடியாததும் மகிமையால் நிறைந்த சந்தோஷமுமாய் உள்ளது.

35. அந்த வஸ்திரமானது ஒரு சிறு மறைவான வல்லமையுடன் உங்களுடைய இருதயத்தில் வரும் போது, நரகத்திலுள்ள எல்லா பிசாசுகளாலும் உன்னை அதை சந்தேகிக்க செய்ய முடியாது. அந்த மறைவான வல்லமை என்பது, உங்க ளுடைய நெற்றியில் ஒரு மகத்தான பெரிய ஏதோவொன்று வருவதோ, வேதாகமத்தில் டாக்டர் பட்டம் பெற்றவர் இவ்விதமாக எழுதினார் என்பதோ அல்ல... அது ஒரு உள்ளான மறைவான வல்லமையாகும். ஆமென். ஏதேன் தோட்டத்திலோ அல்லது

தோட்டத்தின் வெளியேயோ முதலாவது ஆட்டுக்குட்டி அடிக்கப்பட்ட முதற் கொண்டு, அது தேவனுடைய திட்டமாக இருந்து வந்துள்ளது. அது சரியே.

சிம்சோனிடம் அது இருந்தது. அவனிடம் ஒரு மறைவான வல்லமை, பரிசுத்த ஆவியின் ஒரு தொடுதல் இருந்தது. இப்பொழுது, அநேக ஜனங்கள், ‘ஒரு களஞ்சியத்தின் கதவு போன்ற தோள்கள் சிம்சோனுக்கு இருந்தது’ என்கின்றனர். நல்லது, அது அப்படி இருக்கவில்லை... நல்லது, அவனுடைய படத்தை வரைய முயற்சிக்கும் இங்கே யுள்ள இந்த ஓவியர்களில் சிலர்... களஞ் சியத்தின் கதவு போன்ற தோள்களை யுடைய ஒரு மனிதன் ஒரு சிங்கத்தைக் கொல்வதோ அல்லது வாசல் கதவைப் பெயர்த்துக்கொண்டு அங்கிருந்து நடந்து செல்வதோ எனக்கு புதிராக இல்லை.

ஆனால் சிம்சோன் அப்படியே ஒரு சிறு அம்மாவின் பையனாக இருந்தான், அதைப்போன்ற சுருள்முடியை கொண்ட தலையை உடைய சிறு குள்ளனாக இருந்தான். இப்பொழுது, அதுதான் ஜனங்களை முட்டாளாக்குகிறது. அவன் ஒரு சிறு பெண் தன்மை கொண்டவன் போல் தோற்றமளித்த, தன்னுடைய முதுகில் ஏழு சுருள் முடிகளைக் கொண்ட வனான ஒரு சாதாரண பையனாக இருந்தான். அது சரியே. ஒவ்வொருவரும் அவனைக்குறித்து நகைத்தார்கள், பரிசுத்த ஆவியானவரின் சபைக்கு ஒரு மாதிரி. மேலும் அவன் ஒரு நோஞ்சானாக இருந்தான். ஆனால், சகோதரனே, தேவன் அவனை பயன்படுத்த விரும்பும் வேளை வந்த போது, அவன் மிகவும் வல்லமை வாய்ந்த ஒருவனாக இருந்தான்.

தேவன் தம்முடைய கரத்தை அதன் மீது வைத்திருக்கக் கூடிய ஒரு சபையை அவர் விரும்புகிறார். அது எவ்வளவு சிறியதாய் இருந்தாலும் எனக்குக் கவலை யில்லை. 'இரண்டு மூன்று பேர் என் நாமத்தினாலே எங்கு கூடியிருக்கிறார் களோ, அவர்கள் நடுவில் நான் இருக் கிறேன்,' வெறுமனே அதைப் பற்றி பேசுவ தல்ல.

பிறகு நீங்கள், 'நல்லது, நாங்கள் அவருடைய நாமத்தில் கூடிவந்திருக்கி றோம்' என்று கூறலாம். வார்த்தையைக் கொண்டு இயேசுவின் நாமத்தினால் பேசுவது அவர் என்னவாயிருக்கிறார் என்பதை அர்த்தப்படுத்துவதல்ல, இயேசு வின் நாமத்தைப் பற்றிய சூழ்நிலையில் நீங்கள் கூடியிருப்பதன் உங்களுடைய மனப்பான்மையை அது பொறுத்தது. 'நீங்கள் என் நாமத்தினால் கூடி வரும்

போது, நீங்கள் விரும்புவதைக் கேளுங் கள்.' அது நீங்கள் வந்திருப்பதன் நோக்க மாகும், மனப்பான்மை. ஒரு நாமத்தைச் சொல்லி கூப்பிடுவதற்குப் பதிலாக அது ஒரு மனப்பான்மையாக உள்ளது. பாவிகள் தெருவில் அந்த நாமத்தைக் கூப்பிட்டு, அதைக் குறித்து சபித்தும் மற்ற ஒவ்வொன்றையும் செய்கின்றனர். ஆனால் அது நீங்கள் இருக்கும் சூழ்நிலையும், நீங்கள் இயேசுவின் நாமத்தில் வந்திருப் பதைக் குறித்துள்ள உங்களுடைய மனப் பான்மையுமாக இருக்கிறது.

36. என்னால் சிம்சோனைப் பார்க்க முடிகிறது; பெண் தன்மை கொண்ட அந்த சிறு பையனான அவன் தன்னுடைய பெண் சிநேகிதியைப் பார்க்கும்படிக்கு சென்று கொண்டிருந்தான். அவனுடைய தாயார் அவனுடைய சுருள் முடியை சுருட்டி விட்டாள்; இங்கே அவன் தன்னுடைய சிறு

பெண் சிநேகிதியைக் காணச் சென்று கொண்டிருக்கிறான். அப்போது மகத்தான பெரிய சிங்கம் ஒன்று ஓடி வந்து, அவனைப் பார்த்து கர்ஜித்தது. அவனோ உதவியற்றவனாக இருந்தான். மேலும் தேவனுடைய ஆவி அவன் மேல் வந்ததாக வேதாகமம் கூறுகிறது. அவன் அந்த சிங்கத்தைப் பிடித்து, ஒரு ஆட்டுக் குட்டியை கிழிக்கிறது போல இரண்டாகப் பீறிப் போட்டான். தேவனுடைய ஆவி அவன் மேல் வந்த போது அவன் என்ன ஒரு மனிதனாக இருந்தான்! அவனில் ஒரு மறைவான வல்லமை இருந்தது (ஆமென்.) அது அவனுக்குக் கொடுக்கப் பட்டிருந்தது. நல்லது, அதே தேவனுடைய ஆவி தான் பரிசுத்த ஆவியாக உள்ளது. அது ஒரு மறைவான வல்லமையாக இருந்தது. ஆம். அது ஒரு சிங்கக்குட்டியாக இருந்தால் எப்படி இருக்குமோ அதுபோல

அவன் அந்த சிங்கத்தைக் கொன்று போட்டான். அவன் எவ்வளவு வல்லமை யுள்ளவனாக இருந்தான்! ஏனெனில் அவனில் மறைவான வல்லமை இருந்தது.


இப்பொழுது, இந்த மறைவான வல்லமையுள்ள மனிதன்... உங்களால் அவனை அறுவை சிகிச்சை செய்து, அதை கண்டுபிடிக்க இயலாது. மருத்துவர் அவனை துண்டுகளாக வெட்டலாம், ஆனால் அவன் ஒரு சாதாரண மனிதனைப் போல் காணப்பட்டான். அது என்ன வென்று அவர்கள் வியந்தார்கள். அது உங்களுடைய காதுகளுக்குப் பின்னால் சுரண்டும் முயலின் கால் என்று சில ஜனங்கள் எண்ணுகிறார்கள். ஆனால் அது அதுவல்ல. அது நம்முடைய பிதாவாகிய தேவனால் தெய்வீகக் கிருபையின் மூலமாக கொண்டு வரப்பட்ட பரிசுத்த ஆவியின் வல்லமையாக உள்ளது. அது

தனிப்பட்ட நபரை அவருடைய பிரசன்னத்தினால் நிரப்புகிறது. நீங்கள் ஜீவனை – சோவாகிய (Zoe) நித்திய ஜீவனை பெற்றுக்கொள்வீர்கள். தேவனுடைய சொந்த ஜீவனானது உங்களுக்குள் வாசமாய் இருத்தல். ஓ, என்ன ஒரு மறைவான வல்லமை...?...

37.தானியேலிடம் அது இருந்தது. சிங்கங்கள் அவனிடம் ஓடி வந்த போது, அந்த மறைவான வல்லமையானது காணப்பட்டு, சிங்கங்கள் பயமடைந்தன. தானியேலிடம் கொஞ்சம் மறைவான வல்லமை இருந்தது. எபிரேய பிள்ளைகளிடம் அது இருந்தது. அக்கினியானது அவர்களை எரிக்கத் தொடங்கின போது, அது சாதாரண நெருப்பைக் காட்டிலும் வெப்பமாக இருந்தது. எனவே அது அந்த அக்கினியை அணைத்து கயிறுகளை அறுத்துப் போட்டது. மறைவான வல்லமை...

பெந்தெகோஸ்தேவுக்குப் பிறகு பேதுரு அதைக் கொண்டிருந்தான். அவன் அலங்கார வாசல் என்னப்பட்ட வாசலண்டை சென்றான். அங்கே தன் தாயின் வயிற்றிலிருந்து சப்பாணியாய் பிறந்த ஒரு மனுஷன் படுத்திருந்தான். பேதுரு அவனை நோக்கி, 'வெள்ளியும் பொன்னும் என்னிடத்திலில்லை, ஆனால் நீ விசுவாசிப்பாயானால், உன்னிடம் கொடுக்க என்னிடம் கொஞ்சம் மறைவான வல்லமை உள்ளது' என்றான். அவனைக் கையினால் பிடித்து தூக்கி விட்டு, 'இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் எழுந்து நட' என்றான். என்னவென்று உங்களுக்குத் தெரியுமா? அவன் மறைவான வல்லமையைக் கொண்டு வந்தான். அவனுடைய கால்களும் கரடுகளும் பெலன் கொண்டது. அவன் கலைமானைப்போல குதித்தெழுந்து கர்த்தரைத் துதித்துக் கொண்டு,

துள்ளிக் குதிக்கத் தொடங்கினான். வேத சாஸ்திரத்தில் டாக்டர் பட்டம் பெற்ற இவர்கள் வியப்புற்று, ‘இப்பொழுது, இவையெல்லாவற்றையும் குறித்து என்ன?’ என்றனர். பாருங்கள்? மறைவான வல்லமை...



# உலகம் இன்னொரு பிரசவ வேதனையைத் தாங்க முடியாது.



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: இந்த வேத வாக்கியம் இன்றையத்தினம் நிறைவேறிற்று, பிப்ரவரி, 19, 1965

21. ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் பிரசங்கம் செய்ய எழுந்து நின்றேன். பிரசவ வேதனை என்னும் தலைப்பில், கர்ப்பவதி குழந்தையுடன் வேதனைப் படுகிறாள். அவள் பிரசவத்தில் வேதனைப்படுகிறாள். (யோவான் 16:21) என்று இயேசு கூறின வார்த்தையிலிருந்து இவ்வண்ணம் பிரசங்கம் செய்ய இருந்தேன்.

"உலகம் பிரசவ வேதனையில் இருக்கிறது. ஒரு வித்து எப்படி ஒரு புதிய வித்தை உற்பத்தியாக்கத் தானே அழுகிப் போகிறதோ, அப்படியே நாம் பழையதை விட்டு விலக, புதியவை பிறக்கும்.

முதலாம் உலக மகா யுத்தம் உலகத்தை வேதனைக்குள், பிரசவ வேதனைக்குள் ளாக்கினது. உலகத்துக்குப் பயங்கரமான வேதனை உண்டானது. ஏனென்றால் உலகத்தை அழிக்க விஷவாயு உபயோகிக் கப்பட்டது. இரண்டாம் மகா யுத்தம் இன்னும் அதிகமான உபாதையை விளை வித்தது. அணு குண்டுகளும் வெடிகுண்டு களும் உபயோகிக்கப்பட்டன.

உலகம் இன்னொரு பிரசவ வேதனை யைத் தாங்க முடியாது. குண்டுகளை நினைத்த இடத்துக்கு தூக்கி எறியும் ஆயுதங்கள் இவ்வுலகத்தை வெறுமை யாக்கி, புதிய உலகத்தைப் பிறக்க வைக் கும், இப்படி நடக்கும் என்று வேதாகமம் கூறுகின்றது.



# இங்குள்ள ஒருவருக்காவது அப்படி நேராதிருப்பதாக

சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

## செய்தி: கடைசிக் கால சுவிசேஷபணி, 62-06-03

136. இழந்து போனவர்களை இரட்சியும்.

கர்த்தாவே, விளக்குகள் அணையும் முன்பே, வேகமாக பரிசுத்த ஆவியால் நிரப்பும்.

ஏனெனில் கைகாட்டி கீழே இறங்கி விட்டது. சீயோனின் கப்பல் நங்கூரமிடப் பட்டுள்ளது. வெகு விரைவில் அது துறைமுகத்தை அடையும்.

திடீரென்று செய்தித்தாள்கள், “என்ன நேர்ந்தது?” தேசத்தில் நூற்றுக்கணக்கானவர் காணாமற்போய்விட்டனர் என்னும் செய்தியை வெளியிடும்.

ஓ தேவனே, அப்பொழுது மற்றவர்களுக்கு காலதாமதமாயிருக்கும், எடுத்துக்

கொள்ளப்படுதல் நிகழ்ந்துவிட்டது. நியாயத்தீர்ப்பு பூமியின் மேல் விழும். அப்பொழுது நீதிமான்கள் ஏற்கனவே சென்றிருப்பார்கள்.

அவர்கள் கல்லறை தோட்டங்களுக்குச் சென்று, அவர்கள் இந்த கல்லறையைத் திறந்தார்களா? இங்கு என்ன நடந்தது?'' என்று கேட்பார்கள்.

ஓ, இழக்கப்பட்டவர்கள் தங்கள் கதியை அறியும்போது, எப்படிப்பட்ட அழுகையும் கதறலும் உண்டாயிருக்கும் அவர்கள் மலைகளையும் குன்றுகளையும் பார்த்து அழுவார்கள் என்று வேதம் கூறுகின்றது.

அவர்கள் ஜெபிப்பார்கள். ஆனால் அவர்களுடைய ஜெபம் தாமதமாகிவிட்டது. இங்குள்ள ஒருவருக்காவது அப்படி நேராதிருப்பதாக.



# மீட்பு சமீபமாயிருக்கிறது என்பதை நாம் அறிந்திருக்கிறோம். பாருங்கள்? ஏதோ ஒன்று நடக்கவிருக்கிறது

சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்தியிலிருந்து

# செய்தி: கடைசிக் கால சுவிசேஷபணி, 62-06-03

25. முடிவு கால சுவிசேஷத்தைக் குறித்து இப்பொழுது நாம் சிந்தித்துக் கொண்டிருக்கிறோம். செய்தித்தாளை படிக்க அறியும் எவரும்... வானம் கறுத்து அந்தகாரப்படுகின்றது, மேகங்கள் தோன்று கின்றன என்பதை நாம் காணும்போது, மழை பெய்யப் போகின்றது என்பதை நாம் அறிந்து கொள்கிறோம். அதை நாம் காற்றில் உணருகிறோம். தூரத்தில் மின்னல் கொடிபடர்ந்து, காற்று பலமாக அடிக்கும் போது, புயல் வரப்போகிறதென்றும், விரை வில் மழை பெய்யுமென்றும் அறிகிறோம். அது போன்று, செய்தித்தாளைப் படிக்க இயலும் எவரும், தேசங்களின் நிலையைக் கண்டு, ஏதோ ஒன்று நடக்கவிருக்கிறது

என்பதை அறிந்து கொள்வர். ஒருவர் தோளில் துப்பாக்கியை வைத்துக் கொண்டு, யுத்தத்துக்காக எல்லா விதமான போராயுதங்களையும் வைத்துக் கொண்டு, எவ்வித உடன்பாடுமின்றி ஒருவரோ டொருவர் விவாதம் செய்து கொண்டு, மாநாடுகளில் காலணிகளால் உதைத்தும், மேசையைக் கையால் பலமாக குத்து வதையும் காணும் போது, ஏதோ ஒன்று நடக்கவிருக்கிறது என்பதை அறிந்து கொள் வீர்கள். அது ஜனங்களுக்கு அத்தகைய உணர்ச்சியை அளிக்கிறது. உலகம் என்று நாம் அழைக்கும் அந்த வெளிப்புற உலகம், அழிவு வரப்போகிறதென்றும், இந்த அணுசக்தி காலத்தில் அணு ஆயுதங் கள் வெடிக்கலாம் என்னும் உணர்வைப் பெற்றுள்ளது.

ஆனால் கிறிஸ்தவனோ அது கர்த்த ருடைய வருகையின் அடையாளம்

என்பதை அறிந்திருக்கிறான். பாருங்கள்? ஒரு சூழ்நிலை உருவாகியுள்ளது. அதன் மூலம் நீங்கள் எதை காண்கிறீர்கள் என்பதைப் பொறுத்தது. ஏனெனில் அந்த நேரத்தில் என்ன நேரிடுமென்று நமது கர்த்தர் நமக்கு திட்டவட்டமாக அறிவித்துள்ளார். அந்த வேளையும் நாழிகையும் நாம் அறியாமல் போனாலும், ஏதோ ஒன்றை இப்பொழுது நாம் நெருங்கிக் கொண்டிருக்கிறோம் என்பதை அறிவோம்.

26. சில நாட்களுக்கு முன்பு, ஆப்பிரிக்காவில் நான் கண்ட ஒரு ஆட்டுக்குட்டியைக் குறித்து இங்கு கூறினேன். அது பட்டியிலிருந்து வெளியே விடப்பட்டு அமைதியாக புல் மேய்ந்து கொண்டிருந்தது. அப்பொழுது திடீரென்று அதற்கு பயமுண்டானது. இந்த குட்டிக்கு என்ன நேர்ந்ததென்று நான் வியந்தேன். ஒரு செம்மறியாடு வழி தவறிவிட்டால்

தானாகவே தன் இடத்திற்கு மீண்டும் வர அதற்கு தெரியாது. அது முழுவதுமாக வழி தவறிப் போய் விடும். ஆகையால் தான் கர்த்தர் நம்மை செம்மறியாடுகளுக்கு ஒப்பிடுகிறார், நாம் வழிதப்பினால், நம்மை மீண்டும் கொண்டு வர ஒருவருக்கு மாத்திரமே முடியும், அவர்தான் மேய்ப்பர். இந்த ஆட்டுக் குட்டி பட்டியிலிருந்து வெகுதூரம் அலைந்து சென்று, கதறிக் கொண்டிருந்தது. அந்த புல்லின் கீழ் பதுங்கியுள்ளதை நான் கவனித்தேன், ஆனால் அது கவனிக்கவில்லை. ஒரு ஆட்டுக் குட்டிகோ அல்லது செம்மறி யாடுக்கோ, மானைப் போன்று மோப்பம் பிடித்து எதிரியை அறிந்து கொள்ள முடியாது. ஆனால் அது மரணம் அருகி லுள்ளது என்னும் உணர்வைப் பெறும். அங்கு ஒரு சிங்கம் மெல்ல பதுங்கி வந்தது. அது ஆட்டுக் குட்டியை மோப்பம்

பிடித்து, அதைக் கொன்று தின்ன அங்கு வந்தது. ஆட்டுக் குட்டிக்கு பயமெடுத்துக் கொண்டது. அதற்கு காரணம் தெரிய வில்லை, ஆனால் மரணம் மிக அருகில் பதுங்கியுள்ளது என்பதால் அது பயந்தது.

27. உலகமும் அதே போன்ற பயங் கொண்ட நிலையில் தற்பொழுது உள்ளத னால், அவர்கள் தெருவில் தொண்ணூறு மைல் வேகத்தில் காரோட்டி சென்று, மது கடைக்குள் நுழைந்து, இரண்டு மணி நேரம் மது அருந்தி விட்டு, வீடு செல்கின்றனர். அது பலமான தாக்குதல்...

யாரிடமாவது நீங்கள் பேசினால், அவர்கள் கோபமடைகின்றனர். அன் றொரு இரவு நான் கூடாரத்தில் பேசி விட்டு, சகோ. நெவிலுக்கு வந்திருந்த சில அழைப்புகளை நான் எடுத்துக் கொள்ள லாம் என்று கருதி ஆஸ்பத்திரிக்குச் சென்

றேன். ஒவ்வொரு முறையும் நான் நர்ஸ் அல்லது டாக்டரிடம் பேசினபோது, அவர்கள், ''எனக்கு ஒன்றும் தெரியாது என்று கோபமாக பதிலளித்தனர்.

“என்ன நேர்ந்தது? எல்லோருமே கோபத்தை வெளிப்படுத்துகின்றனரே” என்று நினைத்தேன். மனோதத்துவ நிபுணர்கள் இப்பொழுது டாக்டர்களுக்கு சிகிச்சை செய்ய வேண்டியதாயுள்ளது.

ஆனால் அதற்கு ஒரு வழியுண்டு. அது தான் கிறிஸ்து.

28. கிறிஸ்தவன் அந்த நிலையில் இருக்கக் கூடாது, நாம் மகிழ்ச்சி கொண்டவர்களாய் கர்த்தருடைய வருகைக்காக காத்திருக்க வேண்டும். ஏனெனில் அது அருகாமையிலுள்ளது; கல்வாரியின் குளிர்ந்த காற்றை நம்மால் உணர முடிகின்றது. வாக்குத்தத்தம் செய்த பரலோகத்தின்

தேவனை, இயேசு இவ்வுலகில் வாழ்ந்த போது புரிந்த அதே செயல்கள் கடைசி நாட்களில் திரும்பவும் வரும் என்னும் வாக்குத்தத்தத்தையும் நாம் காணும் போது, அது கண்கூடாக நிறைவேறுவதை நாம் காண்கிறோம். அது என்ன? மழை வரும் போது கிடைக்க பெறும் புத்துணர்ச்சியைப் போன்ற புத்துணர்ச்சியின் சுவாசமே. பாருங்கள்? மீட்பு சமீபமாயிருக்கிறது என் பதை நாம் அறிந்திருக்கிறோம். பாருங் கள்? ஏதோ ஒன்று நடக்கவிருக்கிறது. உலகம் அதை காண்பதில்லை. அவர்கள், முன் காலங்களில் நடந்ததுபோல், இப்பொ ழுதும் அதை கேலி செய்கின்றனர். ஆனால் நாமோ அது அருகாமையில் வந்துகொண் டிருக்கிறது என்பதை அறிவோம்.

# கன்னிகைகள்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்தியிலிருந்து

## செய்தி: கேள்விகளும் பதில்களும், ஜனவரி 3, 1954

75. இப்பொழுது இந்த... பிறகு தேவன் பரிசுத்த ஆவியால் நிரப்பினார் ,,, பிறகு அவர் அதை மகிமைப்படுத்தத்தக்கதாக தம்முடைய சபையை வைக்கின்றார். இரண்டாவது வருகையில், இங்கே மணவாட்டி, சபை திரும்பவருகிறது. இப்பொழுது கவனியுங்கள். அவர்கள் உபத்திரவக் காலத்தினூடாக செல்கின் றனரா என்று பாருங்கள். அவர் ''இந்த கன்னிகைகள் வந்து, 'உங்கள் எண்ணெ யில் எங்களுக்கு கொஞ்சங்கொடுங்கள் என்றார்கள்" என்று கூறினார்.

''மணவாளன் வருகின்றார்!'' என்கின்ற சத்தம் புறப்பட்டுச் சென்றது, “இதோ

மணவாளன் வருகின்றார். அவரை சந்திக் கத்தக்கதாக அவருக்கு எதிர் கொண்டுப் போகப் புறப்படுங்கள்'',

ஆகவே இந்த கன்னிகைகள், கன்னிகைகள் என்றால் யார், பரிசுத்தமானவர்கள், பரிசுத்தமாக்கப்பட்டவர்கள் (அதைக் குறித்து சிந்தியுங்கள்), பரிசுத்தமானவர்கள், பரிசுத்த ஆவியின் அபிஷேகம் இல்லாமல் பரிசுத்தமாக்கப்பட்ட ஜனங்கள், அவர்கள், "எங்களுக்கு எண்ணெயைக் கொடுங்கள்'' என்று கூறினார்கள்.

76. ஆகவே அந்த சபையானது ''போதுமான அளவுதான் எங்களிடம் உள்ளது, அப்படியானால் நீங்கள் சென்று ஜெபியுங்கள்” என்று கூறினது. ஆனால் அப்பொழுது மிகவும் காலதாமதமாகி விட்டிருந்தது. ஆகவே, அந்த சபை கலியாணத்திற்குள் சென்றது, இந்த மற்றவர்கள்

புறம்பான இருளுக்குள் தள்ளப்பட்டனர் (அது சரியா?) அங்கே அழுகையும், கூக்குரலும் பற்கடிப்பும் இருந்தது; ஆகவே அவர்கள் உபத்திரவத்திற்குள் சென்று, அவதிப்பட்டு, மரித்தனர்.

77. இயேசு பூமிக்கு திரும்பி வந்தார். அவருடன் ஆயிரம் வருடங்கள், ஆயிர வருட அரசாட்சி துவங்கினது. நீதியுள்ள வர்களும் அநீதியுள்ளவர்களும் வந்தனர். அவர்கள் ஒவ்வொரு மனிதனையும் நியாயத்தீர்த்தனர். ஒரு பக்கம் வெள்ளாடு களும் மறுபக்கம் செம்மறியாடுகளும் இருந்தன. பிறகு தேவன் வந்து பூமியின் விசாலத்திலிருந்து, கூடார சந்திப்பிற்காக சபையை மேலே எடுக்கின்றார், அங்கே நம்முடைய அருமையானவர்களுடன் நாம் ஒன்று கூடுவோம். பாருங்கள்? அங்கே தான் அந்த வித்தியாசம் உள்ளது.

78. இப்பொழுது இங்கேயிருக்கின்ற இந்த ஜனங்கள்... நாம் மரிக்கையில், நாம் இயேசு கிறிஸ்துவுக்குள் இருப்போமா னால், மறுகரையில் நிச்சயமாக கிறிஸ்து இயேசுவாகிய அந்த மகத்தான சரீரத்துடன் இருக்கத்தக்கதாக நாம் செல்வோம். நாம் பாவிகளாக இருப்போமானால், அவிசு வாசிகள் என்னும் பெரிய சரீரத்துடன் இருக்கத்தக்கதாக நாம் செல்வோம்; நம்முடைய பங்கு அங்கே நரகத்தில் மாய்மாலக்காரர்கள் இன்னும் மற்றவர்க ளுடன் இருக்கும் என்றும் தேவன் கூறியுள்ளார். ஆமென்!

# ஒரு பழைய வயலின்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: தேவன் திரைநீக்கப்படுதல், 64-06-14M

176. இதைக் கூறி முடித்து விடுகிறேன். ஏனெனில் பன்னிரண்டு மணிக்கு ஐந்து நிமிடம் ஆகிவிட்டது, இதைக் கூறி விடுகிறேன். இன்னும் பத்து பன்னிரண்டு பக்கங்கள் உள்ளன. மற்றொரு சமயம் அதை பார்க்கலாம், ஒருக்கால் இன்றிரவு.

கவனியுங்கள், இதை கவனியுங்கள். ஒருமுறை ஒரு பழைய வயலின் ஏலத் துக்கு விடப்பட்டது. இதை நீங்கள் பலமுறை கேட்டிருக்கிறீர்கள் - பழைய வயலின். ஏலம் விடுபவன், ''இதற்கு எவ்வ ளவு கொடுப்பீர்கள்?'' என்று கேட்டான். இதை நான் ஒருக்கால் கவிதையின்படி சரியாக கூறாமல் இருக்கலாம், இதை கூறி அநேக ஆண்டுகள் ஆகிவிட்டன, இது என்

நினைவுக்கு வந்தது. அவர்கள் அந்த பழைய வயலினைக் கையிலெடுத்துப் பார்த்தார்கள். காண்பதற்கு அது நன்றாக இல்லை, அது அழுக்கு படிந்ததாயிருந்தது. ஏலக்காரனுக்கு விலை கேட்பவர் எவருமே யில்லை. முடிவில் யாரோ ஒருவர் ஒரு டாலருக்கு கேட்டார் என்று நினைக்கிறேன். அப்படி ஏதோ ஒன்று.

177. அந்த விலைக்கு அதை விற்கக் கூடாது என்று கருதிய ஒருவர் அங்கு நின்று கொண்டிருந்தார். அவர் சென்று வயலினைக் கையிலெடுத்து, அதை இசைக்கும் 'வில்லை' (bow) கையிலெடுத்து அதற்கு 'ரோசின்' தேய்த்து, ஒரு ராகத்தை வாசித்தார். அவர் வாசித்த போது, எல்லோ ரும் அழ ஆரம்பித்தார்கள். அப்படிப்பட்ட ஒரு இன்னிசையை அவர்கள் தங்கள் வாழ்க்கையில் கேட்டதேயில்லை.

ஏலம் விடுபவன், “இப்பொழுது என்ன விலை தருகிறீர்கள்” என்று கேட்டான்.

“இரண்டாயிரம்'', ”ஐயாயிரம்'', ''பத்தாயிரம்.'' பாருங்கள்? அது என்ன? நிபுணனின் கை அந்த பழைய வாத்தியத்தில் என்ன மறைந்திருந்தது என்பதை வெளிப்படுத்தினது.

இப்பொழுதும் அப்படியே! பழைய புஸ்தகம், அது கிழிக்கப்பட்டு, நகைக்கப்பட்டு, எரிக்கப்பட்டு, கேலி செய்யப்பட்டு வந்தது. அவர்களுடைய ஸ்தாபன ஏலத்திற்கு நேரம் வந்துவிட்டது, உலக சபைகளின் ஆலோசனை சங்கம். அவர்கள் எவ்வித கவலையுமின்றி அதை விற்றுக் கொண்டிருக்கின்றனர் ஸ்தாபன ஏலம் ஒன்று வருகிறது.

178. ஆனால் ஞாபகம் கொள்ளுங்கள், அந்த பழைய புஸ்தகத்திலுள்ள ஒன்று, ஒரு

நாளில் ஒரு முன் குறிக்கப்பட்ட, நியமிக்கப்பட்ட கரம் ஒன்று வந்து அதை கையிலெடுத்து, இந்த புஸ்தகத்திலுள்ள வார்த்தையை விவரித்து (முன்குறிக்கப் பட்ட இருதயத்துக்கு, அது உண்டாக்கப் பட்ட பணிக்கு), அதிலுள்ள வாக்குத்தத் தங்களை வெளிப்படுத்தும் என்று வாக் களித்துள்ளது. அது ஒருக்கால், ஓ, பழைய உருளும் பரிசுத்தரின் கூட்டமாக அல்லது அப்படி ஏதோ ஒன்றாக காணப்படும். ஆனால் அந்த வார்த்தையை வெளிப் படுத்த நிபுணரின் கை அவசியமாயுள்ளது. அப்பொழுது அது உருளும் பரிசுத்தரை விட மேலானதாகி விடும். அப்படித்தான் அது நம் ஒவ்வொருவருக்கும் ஆகியுள் ளது, இல்லையா நண்பர்களே? அது மூடபக்தி வைராக்கியத்தின் தொகுப்பு அல்ல. அது யார் கையில் இசைக்கும் வில் உள்ளது என்பதை பொறுத்தது.

ஜெபம் செய்வோம்.

179. எங்கள் பரலோகப் பிதாவே, விசுவாசத்தின் மூலம் நான் அந்த பழைய புஸ்தகத்தின் நிபுணரைக் காண்கிறேன். அவர்கள் அதை பாரம்பரியங்களுக்காக வும், ஸ்தாபனங்களுக்காகவும் பண்டமாற் றம் செய்து, அதை விற்றுப்போட்டார்கள். இப்பொழுது அவர்கள் மனிதனால் ஏற்படுத்தப்பட்ட உலக சபை ஆலோசனை சங்கத்திற்காகவும், கம்யூனிஸக் கொள் கைக்காகவும், நாத்திகத்துக்காகவும் அதை விற்றுப்போடப் பார்க்கிறார்கள். கர்த் தாவே, ஏலம் நடந்து கொண்டிருக்கிறது.

தேவனே, அடியெடுத்து வைத்து முன் வாரும்! நிச்சயம் நீர் வருவீர். இசைக்கும் வில்லைக் கையிலெடுத்து, இந்த வார்த் தையை கையிலெடுத்து, இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவரா யிருக்கிறார் என்று நிரூபிக்கும் தீர்க்க தரிசியை எங்களுக்கு அனுப்புவீராக.

கர்த்தாவே, அநேகர் தங்கள் வாழ்க்கையை விற்றுப்போட்டு, தங்கள் பழைய பாரம் பரியங்களை தூர எறிந்து, திரைகளை உடைக்க விரும்புகின்றனர். கர்த்தாவே, அவர்களுக்கு அதுவேண்டும். அவர்கள் எதையும் கொடுக்க ஆயத்தமாயுள்ளனர், அவர்களுக்கு இயேசுவை மாத்திரம் தாரும்.

கர்த்தாவே, அதை நீர் அவர்களுக்கு இப்பொழுது நிரூபித்துவிட்டீர் என்று எண்ணுகிறேன். அவர்கள் எல்லாவிடங் களிலுமிருந்தும் வந்துள்ளனர். அவர்கள் தங்கள் சம்பாதனையை செலவழித்து, எல்லாவற்றையும் செய்து கூட்டத்துக்கு வர முயல்கின்றனர், அவர்களால் முடிந்த எல்லாவற்றையும் அவர்கள் செய்கின்றனர். ஏனெனில் விலை மதிக்க முடியாத அந்த முத்தை அவர்கள் கண்டு கொண்டனர். மற்றவை அனைத்தும் மிகச் சிறியவை களே. பிதாவே, இவர்களை ஆசீர்வதியும்.

180. கர்த்தாவே, இன்று காலை இந்த பிரசங்க பீடத்தின் மேல் உறுமால்கள் வைக்கப்பட்டுள்ளன. ஒருக்கால் சிலர் இன்றிரவு சுகமளிக்கும் ஆராதனை நடை பெறுவதற்கு முன்பே போக வேண்டி யிருக்கும். ஓ, நித்திய தேவனே, கீழே நோக்கிப்பாரும். நீர் இங்கிருக்கிறீர் என்று நானறிவேன். நீர் திரைமறைக்கப்பட்டிருக் கிறீர். கர்த்தாவே, ''உறுமால்கள்" என்று அழைக்கப்படுகிற இந்த சிறுதிரைகளை, சிறு ''கச்சைகளை'', குழந்தைகளுக்கு சிறு "காலுறைகளை'' நான் அனுப்புகிறேன். உமது வார்த்தை இன்று காலை இங்கு பிரசங்கிக்கப்பட்டது என்பதற்கு இந்த சிறு திரை அடையாளங்களை அனுப்புகிறேன். ஒரு விசுவாசி என்னும் ரீதியில் நான் விசுவாசிக்கிறேன் என்பதற்கு அறிகுறியாக என் சரீரத்தின் கைகளை அதன் மேல் வைக்கிறேன். கர்த்தாவே, விசுவாசத்தி னால் இக்கட்டிடத்திலுள்ள ஒவ்வொரு

வரும் அவ்வாறே செய்கின்றனர். வியாதியஸ்தர் சுகமடைவார்களாக.

181. அந்த வயலின் இசைப்பவர் பழைய வயலினை வாசித்தது போல, கர்த்தாவே, நீர் இங்கிருந்தே வார்த்தையை இசைக்க முடியும். அது சரியான ராகத்தை இசைக்கும்படி செய்யும். நிபுணரின் கையில் வில் இருக்கும்போது, அவர் முழு காட்சியில் நிற்பதை நாங்கள் காண்போம்.

**அந்த நாளிலே அவர்கள் அந்த பழைய வயலினுக்கு ஒன்றுமே கொடுக்க மனதில்லாதபோது, அதை அவர்கள் வேண்டாம் என்ற போது அவர்கள் என்ன நினைத்திருப்பார்கள். அவர்களுக்கு அதை வீட்டிற்கு கொண்டு போகப் பிரியமில்லை. ஆனால் கைதேர்ந்த நிபுணர் அதை கையில் எடுத்த மாத்திரத்தில், அதைக்கொள்ள அவர்கள் எல்லாவற்றையும் விற்றனர். யார் அதைக் கொள்ளவேண்டும் என்பதைக்குறித்து அவர்கள் தர்க்கம் செய்து சண்டையிட்டுக்**

**கொண்டிருந்தார்கள். ஆனால் அதற்குள் காலதாமதமாகிவிட்டது.**

182. **என்றாவது ஒரு நாள் கர்த்தருடைய எக்காளம் முழங்கி இனி காலம் செல்லாது என்னும் போது அப்படித்தான் இருக்கும். ஆனால் பரியாசம் செய்யப்பட்டவர்கள், திறந்த திரைக்கு முன்னால் நின்றுகொண்டு தேவனுடைய வார்த்தை வெளிப்பட்டதைக் கண்டவர்கள். மற்றவர்கள் அதற்காக அலறுவார்கள், ஆனால் நீர் கூறினது போன்று "அப்பொழுது காலதாமதமாயிருக்கும்" அவர்கள் கலியாண விருந்துக்கு சென்றுவிட்டனர். இவர்கள் கைவிடப்படுவார்கள். அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கும்.**

பிதாவே, இன்று காலை ஒவ்வொரு நபரும் விசுவாசிக்க உதவி செய்யும். தன்னயம் என்னும் ஒவ்வொரு திரையையும், அவிசுவாசம் என்னும் ஒவ்வொரு திரையையும் உடைத்தெறிந்து, விசுவாசி

களுக்கு முன்னால் வல்லமையுள்ள வெற்றி சிறந்தவர் திரை நீக்கப்பட்டு அவர்கள் காணும்படி செய்யும். ஏனெனில், “இதோ உலகத்தின் முடிவுபரியந்தம் நான் உங்களுடனே கூட இருக்கிறேன். இன்னும் கொஞ்ச காலத்தில் உலகம் என்னைக் காணாது, நீங்களோ என்னைக் காண் பீர்கள்.'' கர்த்தாவே, நீர் இதுவரை செய்து வந்தது போல், உம்மை எங்கள் மத்தியில் காண்பித்தருளும். நாங்கள் காணக்கூடிய விதத்தில் உமக்கு முன்னால் இருக்கும் வரைக்கும் அதேவிதமாக நீர் இருந்தரு ளும் - அந்த என் மார்ஃப் மாறி நீர் மறுபடியும் மனுஷ குமாரன் தாவீதின் குமாரனாக ஆகும் வரைக்கும். கர்த்தாவே, இதை இயேசுகிறிஸ்துவின் நாமத்தின் மூலம் அருளுவீராக.


நீங்கள் தொடர்ந்து சென்று, பிரசங்கித்து, சிறை ஆராதனை நடத்தி, எல்லோருக்கும் சாட்சி சொல்லுங்கள்.
சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: கேள்விகளும் பதில்களும், ஆகஸ்டு 23, 1964 மாலை

314. **சிறை ஆராதனைகளுக்கும், ஆத்துமாக்களை இரட்சிப்பதற்கென சாட்சி கூறும் ஊழியத்துக்கும் மிகவும் கால தாமதமாகி விட்டதா? மேலும், கர்த்தர் சீக்கிரம் வரப் போவதனால், ஒருவர் தனக்கு இப்பொழுதுள்ள எல்லாவற்றையும் விற்று விட வேண்டுமா?**

200. நல்லது, உங்களுக்கு எப்படி.... அப்படிப்பட்ட ஒன்றை நீங்கள் விசுவாசிக்க, நான் ஒன்றையும் கூறவில்லை என்று நம்புகிறேன். நான் அவ்விதம் ஏதாகிலும் கூறினதுண்டா? அவ்விதம் கூறியிருந்தால், என்னை மன்னித்துக்கொள்ளுங்கள். நான் அந்த அர்த்தத்தில் கூறியிருக்க மாட்டேன். பாருங்கள்? இவைகளை நீங்கள் ஊகித்துக்

கொள்ள வேண்டாம். நீங்கள் தொடர்ந்து சென்று, பிரசங்கித்து, சிறை ஆராதனை நடத்தி, எல்லோருக்கும் சாட்சி சொல் லுங்கள்.

201. இங்கு பாருங்கள். ஏழாம் நாள் ஆசரிப்பு சபையினர் அண்மையில், ஐம்பது அல்லது அறுபது ஆண்டுகளுக்கு முன்பு - அதை நான் 'குரியர் ஜர்னல்' செய்தித்தாளில் பார்த்திருக்கிறேன் (அது என் பெட்டியில் எங்கோ உள்ளது), 'குரியர் ஜர்னல்' செய்தித்தாளில் ஒரு பெரிய பாகம். அவர்கள் தங்கள் பழைய பெயரைக் களைந்து விட்டு, அவர்கள் 'மில்லரைட்ஸ்' என்று அழைக்கப்படுவதை தவிர்த்து, ஏழாம் நாள் ஆசரிப்பு சபை என்று அழைக்கப்படலாயினர்: "குரியர் ஜர்னல்' என்னும் செய்தித் தாளின் ஒரு பெரிய தாளில் - அது ப்ராக்ளின், கென்னடி என்னுமிடத்தில் வெளியிடப்பட்டது.

அவர்கள் அனைவரும் தங்கள் சொத்துக் களை விற்றுவிட... அவர்கள் ஒரு தேதியை குறித்து, அதை வேத வசனங்களின் மூலம் நிரூபித்து - இயேசு அந்த குறிப்பிட்ட தேதியில் வருவாரென்று அறிவித்து, தங்கள் கின்னரங்களுடனும் மற்றவை களுடனும் மலைக்கு மேலே சென்று அங்கு உட்கார்ந்து காத்துக் கொண்ருந்தனர். அடுத்த நாள் காலையில் பனி பெய்து அவர்களுடைய சிறகுகளையெல்லாம் நனைத்து விட்டது. காற்றெல்லாம் போய் விட்டவர்களாக அவர்கள் கீழே இறங்கி வந்தனர். பாருங்கள்? அது கொள்கை களும் (cults) மற்றவைகளும்.

202. அதை நம்பாதீர்கள். இயேசு இன்னும் நூறு ஆண்டுகளுக்கு வராம லிருக்கக் கூடும். அவர் எப்பொழுது வருகிறார் என்று எனக்குத் தெரியாது. அவர் எப்பொழுது வருகிறார் என்று எந்த

மனிதனுக்கும் தெரியாது. ஆனால் அவர் வரும் வரைக்கும் நான் தொடர்ந்து பிரசங்கித்துக் கொண்டும், என்னாலான எல்லாவற்றையும் செய்து கொண்டிருக்க வும் முயற்சி செய்து கொண்டிருக்கப் போகிறேன். அவர் இன்று இங்கு இல்லாமல் போனால், நாளை அவரை எதிர்பார்த்துக் கொண்டிருப்பேன். அவர் இந்த வாரம் இங்கு இல்லாமல் போனால், அவருக்காக அடுத்த வாரம் காத்திருப் பேன். அடுத்த பத்து ஆண்டுகளுக்கு அவர் வராமலிருந்து, நான் உயிர் வாழ்வே னானால், அடுத்த முப்பது ஆண்டுகள் அவருக்காக காத்திருப்பேன். பாருங்கள்? நான் அப்பொழுதும் அவரை எதிர் பார்த்துக் கொண்டிருப்பேன். அவர் எப்பொழுது வருவாரென்று எனக்குத் தெரியாது. ஆனால் அவருடைய வார்த் தைக்கும் அவருடைய மக்களுக்கும் நான்

உண்மையாய் ஜீவித்து, ஒரு கிறிஸ் தவனைப் போல் வாழ்ந்து, அவருடைய வருகைக்காக காத்திருக்க விரும்புகிறேன். பாருங்கள்?

203. சிறை ஆராதனைகளில் தொடர்ந்து பிரசங்கித்துக் கொண்டு உங்களாலான மட்டும் எல்லோரையும் இரட்சிப்புக்குள் கொண்டு வாருங்கள். அவர் எப்பொழுது வருகிறாரென்று எனக்குத் தெரியாது; யாருக்குமே தெரியாது. ஆனால் இந்த ஒரு காரியத்தை நான் கூற விரும்புகிறேன். இதற்காகத் தான் இதை நான் உங்களுக்கு கூற முயல்கிறேன், உங்கள் சொந்த வியாக்கியானத்தை இதற்கு தர மாட்டீர்கள் என்று நம்புகிறேன் .... அந்த நபரைப் பார்த்து நான் கூச்சலிடவில்லை. தேவன் உங்களை ஆசிர்வதிப்பாராக, சகோதரனே, சகோதரியே, நீங்கள் யாராயிருந்தாலும், இது இந்நகரிலிருந்து வெளியே உள்ள

ஒருவர் போல் தோன்றுகிறது, ஏனெனில் அது அஞ்சல் கார்டில் எழுதப்பட்டுள்ளது. அது கொலராடோவிலுள்ள டென்வர் என்று நினைக்கிறேன். ஆம், பைக் பீக், கொலராடோ. யாரோ ஒருவர் அதை அஞ்சல் வழியாக அனுப்பியிருக்கக் கூடும். அதனால் பரவாயில்லை. அவர்கள் ஒலிநாடாவை ஒருக்கால் பெற்றுக்கொள் வார்கள்.

204. ஆனால் நாம் ஞாபகம் கொள் வோம், நீங்கள் ஒன்றையும் மாற்றி விடா தீர்கள், பாவத்திலிருந்து நீதிக்கு மாத்திரம் உங்களை மாற்றிக் கொள்ளுங்கள். உங்கள் பணியில் நீங்கள் தொடர்ந்து நிலைத் திருந்து, அதை அப்படியே செய்து கொண் டிருங்கள். இதை புரிந்து கொண்டவர்கள் “ஆமென்" என்று சொல்லுங்கள் (சபை யோர் “ஆமென்” என்று பதிலளிக்கின்றனர்

- ஆசி). பாருங்கள்? அதை இப்பொழுது செய்யுங்கள்.





# சகோ. பிரான்ஹாமே, பாவிகளுக்கு இனி பிரசங்கிப்பதற்கு இப்பொழுது நேரம் மிகவும் தாமதமாகி விட்டதா?

சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: கேள்விகளும் பதில்களும், ஆகஸ்டு 23, 1964 மாலை

310. **சகோ. பிரான்ஹாமே, பாவிகளுக்கு இனி பிரசங்கிப்பதற்கு இப்பொழுது நேரம் மிகவும் தாமதமாகி விட்டதா?**

190. இல்லை! இல்லை! அவ்விதம் உங்கள் மனதில் சிந்திக்காதீர், நண்பரே, வீட்டை தொடர்ந்து கட்டிக் கொண்டே யிருங்கள்.

உங்களால் முடிந்த எல்லாவற்றையும் தொடர்ந்து செய்து கொண்டேயிருங்கள்.

நீங்கள் அழைத்துக் கொள்ளப்படும் வரைக்கும் தொடர்ந்து சென்று கொண்டே யிருங்கள், பாருங்கள்?

அவன் உலகத்தோடு –
உலகப்பொருளோடு – நட்புகொண்டு,
அதே சமயத்தில் இயேசுவுடனும் நட்பு
கொள்ளலாம் என்று கருதினான்.
ஆனால் அவ்வாறு
செய்யமுடியாதபடிக்கு, அவனுக்கு
காலதாமதமாகிவிட்டது.



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்தியிலிருந்து

## செய்தி: முரண்பாட்டின் விதை, ஜனவரி 18, 1965

35. ஆனால் இவ்விரு விதைகளும் - தேவனுடைய விதையும், முரண்பாட்டின் விதையும் - வளர்ந்து, அது யூதாஸ் காரியோத்திலும் இயேசுவிலும் முடி வடைந்தது. இயேசு தேவனுடைய வித்தாக இருந்தார். அவர் தேவனுடைய சிருஷ் டிக்கு ஆதியானவர் (வெளி.3:14). அவர் தேவனேயன்றி வேறு யாருமல்ல. யூதாஸ்காரியோத்து கேட்டின் மகனாகப் பிறந்தான் (யோவான் 17:12). அவன் பாதாளத்திலிருந்து புறப்பட்டு வந்து பாதாளத்துக்குத் திரும்பிச் சென்றான். இயேசு கிறிஸ்து தேவனுடைய குமாரன். அவர் வெளிப்பட்ட தேவனுடைய வார்த்தை. யூதாஸ்காரியோத்து, அவனு

டைய முரண்பாட்டில், பிசாசின் வித்தாக இருந்தான். அவன் ஆதியில் தன் தகப்பன் காயீன் இருந்தது போலவே இருந்தான்.

36. யூதாஸ், சபையில் இருந்தது போல் நடித்தான் உண்மையில் அவன் உத்தம மாய் இருக்கவில்லை. அவனுக்கு உண்மை யில் விசுவாசம் இல்லை. (அப்படியிருந் திருந்தால் அவன் இயேசுவை மறுதலித் திருக்க மாட்டான்) ஆனால் அவன் முரண்பாட்டின் விதையை விதைத்தான். அவன் உலகத்தோடு -உலகப்பொருளோடு - நட்புகொண்டு, அதே சமயத்தில் இயேசுவுடனும் நட்பு கொள்ளலாம் என்று கருதினான். ஆனால் அவ்வாறு செய்ய முடியாதபடிக்கு, அவனுக்கு காலதாமத மாகிவிட்டது. அந்த பயங்கரமான நேரம் வந்தபோது - அவன் இயேசுவைக் காட்டிக் கொடுக்கும் அந்த பொல்லாத செயலைப் புரிந்தபோது -அவன் முன்னேற்றத்திற்கும்

பின்வாங்குதலுக்குமிடையேயிருந்த கோட்டைத் தாண்டினான். அவன் வஞ்சகனாக, தான் செல்ல வேண்டிய வழியில் செல்ல வேண்டியதாயிற்று. அவன் முரண்பாட்டின் விதையை விதைத்து, அக்காலத்து ஸ்தாபனங்கள்லிருந்த பரிசேயர், சதுசேயர் இவர்களின் தயவைப் பெற முயன்றான். அவன் பணம் சம்பாதித்து, ஜனங்களின் மத்தி யில் பிரபலம் வாய்ந்தவனாக இருக்கலாமென்று எண்ணினான், மனிதர்களுடைய தயவை நாட முயல்வதால், அநேகர் அந்த முரண் பாட்டிற்குள் சென்று விடுகின்றனர். நாம் மனிதருடைய தயவையல்ல, தேவனுடைய தயவை நாடுவோம்! ஆனால் யூதாஸோ, அந்த முரண்பாடு அவனுக்குள் இருந்ததனால் மனிதருடைய தயவை நாடினான்.

37. இயேசு வார்த்தை என்று நமக்குத் தெரியும். "ஆதியிலே வார்த்தை இருந்தது.

அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது, அந்த வார்த்தை மாம்சமாகி நமக்குள்ளே வாசம் பண்ணினார்." என்று யோவான் 1 உரைக்கிறது. (யோவான் 1:1,14.) வார்த்தையே விதை. அந்த விதை மாமிசமாகி நம்மிடையே வாசம் பண்ணினார்.

38. யூதாஸ் சத்துருவின் விதையாக, முரண்பாட்டின் விதையாக இருந்து, அவனும் மாமிசமாகி, யூதாஸ்காரியோத்து என்னும் மனிதனாக நம்மிடையே வாசம் பண்ணினான். அவனுக்கு உண்மை யான விசுவாசம் இருக்கவில்லை. விசுவாசம் என்னும் ஒன்று அவனுக்கிருப்பதாக அவன் பாவனை செய்தான். உண்மையான விசுவாசம் என்பது ஒன்று, பாவனை விசுவாசம் என்பது வேறொன்று.

# கழுகின் சத்தம்

## நவம்பர் 28, 2023



1

சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்திகளிலிருந்து